செ.வெ.எண். 26 நாள். 18.1.2012

**நாமக்கல் மாவட்ட ஆட்சியரக வளாகத்திலுள்ள மாவட்ட விளையாட்டு மையத்தின் மேம்பாட்டு பணிகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் ஆகியோர் துவக்கி வைத்தனர்.**

2007-ம் ஆண்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுமார் 14.65 ஏக்கர் நிலம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தினுள் விளையாட்டு துறைக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் சுமார் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்டேடியம் கட்டப்பட்டு வரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று இந்த மைதானத்தில் மேம்பாட்டு பணிகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால், ஆகியோர் துவக்கி வைத்தனர். தன்னிறைவு திட்டத்தின்கீழ் 14.65 ஏக்கர் நிலம் முழுவதும் ரூ.24.65 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்படவுள்ளது. மேலும் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.38.35 லட்சம் மதிப்பீட்டில் நிலத்திலுள்ள களிமண் அகற்றப்பட்டு கிராவல் மண் நிரப்பப்படவுள்ளது. பின்னர் இந்த இடத்தில் ஓடுதளம், கைப்பந்து, கபாடி, டென்னிஸ், நீளம் தாண்டுதல் ஆகியவற்றிற்கு தேவையான பயிற்சி களங்கள் அமைக்கப்படவுள்ளது. கிராவல் மண் நிரப்புவதன் மூலம் மைதானத்தில் அனைத்து பருவ காலங்களிலும் விளையாட்டு பயிற்சிகளை மேற்கொள்ளலாம். இன்று மொத்தம் ரூ.63 லட்சம் மதிப்பீட்டில் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்துபணிகளும் நான்கு மாதங்களில் நிறைவடையும்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., மாவட்டவருவாய் அலுவலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ச.சா.குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர், மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.கே.காந்திமுருகேசன், துணைத்தலைவர் திரு.ஏ.பி.பழனிவேல், நகர்மன்றத்தலைவர் திரு.இரா.கரிகாலன், ஊரக வளர்ச்சித்துறை உதவி பொறியாளர் திரு.வி.பழனிவேல், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. எஸ்.தர்மகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.